இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 75 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 08 – ஞாயிற்றுக்கிழமை 25 அக்டோபர் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 75 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 08 - Sunday 25 October 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

### பள்ளிகள் சாதிவெறிக்கான களமாக்கப்படுவதா? கோவை மாணவனை தற்கொலைக்குத் தூண்டிய

# உண்மைக் குற்றவாளிகளை உடனே கைது செய்ய வேண்டும்!

## 'டம்மி' த.வெ.க. அரசுக்கு - எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, அக். 25 -**

**கோவை பீளமேட்டைச் சேர்ந்த மாணவர் அகிலன், அதே பகுதியில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளியில் 11ஆம் வகுப்பு பயின்று வந்தார். பள்ளியில், மாட்டுக்கறி சாப்பிடுவது பற்றியும், சாதி பற்றியும் ஆசிரியரும், சக மாணவர்களும் அவரை கேலி செய்ததாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில் வீட்டில் தனியாக இருந்தபோது மாணவர் அகிலன் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.**

**இந்நிகழ்வையடுத்து வலைதளத்தில் பதிவிட்டுள்ள சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "பள்ளிகள் சாதிவெறிக்கான களமாக்கப்படுவதை இந்த அரசு உடனே தடுத்து நிறுத்துவதோடு, இந்தச் சம்பவத்தில் மாணவனை தற்கொலைக்குத் தூண்டிய உண்மைக் குற்றவாளிகளை உடனே கைது செய்ய வேண்டும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாடு த.வெ.க. ஆட்சியில் கொலை நாடாக மாற்றப்பட்டுள்ளது. சிறுமிகள் பாலியல் கொலைக்கு உள்ளாகிறார்கள். இளம்பெண்கள் முதல்



மூதாட்டிகள் வரை பாலியல் கொடுமைக்கும் படுகொலைக்கும் ஆளாகிறார்கள். மருத்துவமனைகளில் பணியாற்றும் நர்சுகள், பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியைகள் உள்ளிட்ட யாரும் பாதுகாப்பாக வாழ முடியவில்லை.

செஞ்சியில் காணாமல் போன 7 வயது சிறுமி எங்கே என்று 12 நாட்களாகத் தெரியவில்லை.

குற்றச்செயல் பலவற்றில் த.வெ.க. நிர்வாகிகள் நேரடியாகத் தொடர்பு கொண்டிருப்பது குறித்துப் புகார் தெரிவிக்கப்பட்டாலும் விஜய் அரசு எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. குற்றவாளிகளைத் திட்டமிட்டுக் காப்பாற்றும் வேலையே தொடர்கிறது.

குற்றம் செய்பவர்கள் பயப்படுவது இல்லை. குற்றவாளிகள் தங்களுக்கான அரசாக இதைப் பார்க்கிறார்கள். பொதுமக்களின் அச்ச உணர்வு என்பது அவர்களின் உயிருக்கே ஆபத்தாக முடிந்து விடுகிறது.

பெருந்துறை அருகே சுடுகாட்டில் பட்டியல் இனச் சமூகத்தவரின் உடலை எரித்ததற்காக சாதிய ஒடுக்குமுறை காரணமாக, காலில் விழச் செய்து மன்னிப்பு கேட்க வைத்த கொடூர நிகழ்வு ஏற்படுத்திய அதிர்வு குறைவதற்குள் கோவையில் சாதியப் பாகுபாட்டால் பள்ளி மாணவன் தற்கொலை செய்து மாய்ந்திருக்கிறார்.

இந்தக் கொடூர நிகழ்வைக் கண்டித்து எதிர்க்கட்சித் தலைவரும் கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது கண்டனத்தை சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ளார்.

**எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

கோவையில் பள்ளியில் ஏற்பட்ட சாதியப் பாகுபாட்டினால் 15 வயது டைய ஒடுக்கப்பட்ட சமூக மாணவன் தற்கொலை செய்து கொண்ட சம்பவத்தில் இதுவரை குற்றவாளிகளைக் கைது செய்யாத இந்த டம்மி அரசை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அந்தப்பள்ளியில் மாணவர்களின் உணவு பழக்க வழக்கங்கள் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு, மாட்டிறைச்சி உண்பதாகக் கூறிய சம்பந்தப்பட்ட மாணவன், சாதி ரீதியாகப் பாகுபாட்டை எதிர்கொண்டு இருக்கிறார். இதனால் ஏற்பட்ட மன உளைச்சலில் அவர் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்.

இந்தச் சூழலில் மாணவனின் பெற்றோர்கள் - உறவினர்களின் போராட்டத்துக்குப் பிறகு வழக்கு மட்டுமே பதிவு செய்துள்ள காவல் துறை, இதுவரை மாணவனின் மரணத்துக்குக் காரணமானவர்களை கைது செய்ய வில்லை.

பள்ளிகள் சாதிவெறிக்கான களமாக்கப்படுவதை இந்த அரசு உடனே தடுத்து நிறுத்துவதோடு, இந்தச் சம்பவத்தில் மாணவனை தற்கொலைக்குத் தூண்டிய உண்மைக் குற்றவாளிகளை உடனே கைது செய்ய வேண்டும்.

இவ்வாறு அப்பதிவில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### ஆசிய பாரா விளையாட்டு – பேட்மிண்டன் ஒற்றையர் பிரிவில் வெள்ளிப் பதக்கம்!

## 'தொடர்ந்து மிளிருங்கள் துளசிமதி!'

### வலைதளப் பதிவில் – உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!




சென்னை, அக். 25- ஆசிய பாரா விளையாட்டு பேட்மிண்டன் ஒற்றையர் பிரிவில் தமிழ்நாட்டைச் சேர்ந்த துளசிமதி முருகேசன் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

அதனையடுத்து அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து வலைதளத்தில் செய்தி வெளியிட்டுள்ள சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "தமிழ்நாட்டின் பெருமை துளசிமதி முருகேசனுக்கு வாழ்த்துக்கள்! தொடர்ந்து மிளிருங்கள் துளசிமதி! தமிழ்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் பெருமை சேர்த்திடுங்கள்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது வலைதளப் பதிவு வருமாறு:-

**ஆசிய பாரா விளையாட்டு இறுதிப்போட்டியில் சீனாவின் பாராலிம்பிக் சாம்பியனை எதிர்த்து அபாரமாகப் போராடி, பேட்மிண்டன் ஒற்றையர் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற நம் தமிழ்நாட்டின் பெருமை துளசிமதி முருகேசனுக்கு வாழ்த்துகள்!**

**சீனா மற்றும் இந்தோனேசிய வீராங்கனைகளை எதிர்த்து கலப்பு இரட்டையர் மற்றும் இரட்டையர் இறுதிப்போட்டிகளில் களமிறங்கத் தயாராகும் அவருக்கு எங்களது மனமார்ந்த வாழ்த்துகள்!**

**துளசிமதி, தொடர்ந்து மிளிருங்கள்! தமிழ்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் பெருமை சேர்த்திடுங்கள்!**

இவ்வாறு - எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### வங்கக்கடலில் உருவானது

## புதிய காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி !

### நாளை (26ஆம் தேதி) புயலாக வலுப்பெறும்!

*சென்னை, அக். 25-* வங்கக்கடலில் புதிதாக உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, நாளை (26-ஆம் தேதி) புயலாக வலுப்பெற வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு மற்றும் மத்திய கிழக்கு வங்கக் கடலை ஒட்டிய பகுதியில் புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளது.

இந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும் என்றும், இன்று (25-ஆம் தேதி) ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, நாளை (26-ஆம் தேதி) காலை புயலாக மாற வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. புயலாக வலுப்பெற்ற பின்னரும் மேற்கு, வடமேற்கு திசையில் நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த இரண்டு நாட்களில் மேலும் வலுப் பெற்று வடக்கு ஆந்திரப் பிரதேசம் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஒடிசா கடற்கரைப் பகுதிகளை நோக்கி நகரக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புயலால் தமிழ் நாட்டிற்கு பெரிய பாதிப்பு இல்லை என்றாலும், சென்னையில் இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மைய இயக்குனர் துரை தெரிவித்துள்ளார்.

### போராட்டத்தில் பங்கேற்பதையே

## காவல்துறையின் உத்தரவுகளை மீறியதாக; கருத முடியாது!

### புதுடெல்லி உயர்நீதிமன்றம் கருத்து!

*புதுடெல்லி, அக். 25 -* மத்திய பணியாளர் தேர்வாணைய தேர்வு நடத்துவதில் முறைகேடுகள் நடந்ததாகக் குற்றஞ் சாட்டி, கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ராம்லீலா மைதானத்தில் போராட்டம் நடைபெற்றது. தடை உத்தரவுகளை மீறி, போராட்டக்காரர்கள் தொடர்ந்து மைதானத்தில் இருந்ததாக குற்றம் சாட்டி காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்தனர். காவல்துறையினர் நடவடிக்கைக்கு எதிராக மனுதாரர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த டெல்லி உயர்நீதிமன்றம், மனுதாரர் போராட்டக்காரர்களிடையே இருந்தார் என்பதற்காக மட்டுமே அவர் மீது குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடர முடியாது என்று கூறியுள்ளது.

போராட்டத்தில் பங்கேற்றார் என்பதால் அவர் சட்டபூர்வ உத்தரவுகளை மீறியதாகக் கருத முடியாது என்று நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

### பழைய வாக்குச் சீட்டு முறையிலேயே தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்! இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர்

# ஞானேஷ்குமார் பதவி விலக வேண்டும்!

### தேர்தல் ஆணையம் நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கழகத்தின் கருத்துகள் வலியுறுத்தப்பட்டு – கழகம் வெளிநடப்பு!

**சென்னை, அக்.25-**

**வாக்காளர் திருத்தம் தொடர்பாக தேர்தல் ஆணையம் கூட்டிய அனைத்துக் கட்சி கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கழக துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின், எம்.எல்.ஏ., மற்றும் சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன், (முன்னாள் எம்.எல்.ஏ). ஆகியோர் கலந்து கொண்டு தி.மு.கழகத்தின் சார்பில் பின்வரும் கருத்துக்களை எடுத்துவைத்து வெளிநடப்புச் செய்தனர்.**

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாட்டில் தற்போது அமல்படுத்தப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்புச் சுருக்கத் திருத்தம் (SIR) நடைமுறைகளால் ஏற்பட்டுள்ள கடுமையான குளறுபடிகள், ஜனநாயகத்தின் மீதும், தேர்தல் அமைப்பின் மீதும் பொதுமக்கள் மத்தியில் பெரும் ஐயத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

SIR நடவடிக்கையின் காரணமாகத் தமிழ்நாட்டின் வரைவு வாக்காளர் பட்டியலிலிருந்து 97 லட்சத்திற்கும் மேற்பட்ட பெயர்களும், இறுதிப் பட்டியலிலிருந்து 74 லட்சம் பெயர்களும் எவ்வித முறையான முன் அறிவிப்புமின்றி தன்னிச்சையாக நீக்கப்பட்டுள்ளன.

ஒரே முகவரியில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வரும் தகுதியான குடிமக்களின் பெயர்கள் அகற்றப்பட்டிருப்பது, வாக்காளர் உரிமையைப் பறிக்கும் செயலாகும்.

#### ஒட்டுமொத்தத் தேர்தல் முறையும் சீர்குலைவு!

தன்னிச்சையாக நீக்கப்பட்ட வாக்காளர்களைக் கண்டறிந்து மீண்டும் சேர்க்கைக்கான படிவங்களைச் சமர்ப்பிக்கும் தேவையற்ற பெரும் சுமையை அப்பாவிப் பொதுமக்கள் மீதே தேர்தல் ஆணையம் திணிப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும். அவசர கதியில் மேற்கொள்ளப்பட்ட இப்பணியால் ஒட்டுமொத்தத் தேர்தல் முறையுமே சீர்குலைந்துள்ளது.

கடந்த காலத்தில் 2002 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நடைபெற்ற SIR பணியின் போது வீடு வீடாக நேரடியாக ஆய்வு செய்யப்பட்டு, வாக்காளர்களின் புகைப்படம் எடுக்கப்பட்டு, முகவரிகள் முறையாகச் சரிபார்க்கப்பட்ட பிறகே அடையாள அட்டை வழங்கப்பட்டன. யாரிடமும் குடியுரிமைச் சான்று கோரப்படவில்லை. தற்போதைய SIR இதை தலைகீழாக்கியுள்ளது. 2002ஆம் ஆண்டு பட்டியலுடன் இணைக்க முடியாத ஒவ்வொருவரும் தங்களை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

#### உள்நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட SIR செயல்பாடு!

**தற்போது குடியுரிமைச் சட்டங்களை (Citizenship Laws) மனதில் கொண்டும், குறிப்பிட்ட வாக்காளர்களின் பெயர்களை மட்டும் பெருமளவில் நீக்கும் உள்நோக்கத்துடனும் இச்செயல்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதோ என்ற ஐயம் அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது.**

தற்போது காணப்பட்டுள்ள SIR குளறுபடிகள் மற்றும் முறைகேடுகளை முழுமையாகக் நீக்கிவிட்டு, முந்தைய நம்பகமான வாக்காளர் பட்டியலின் அடிப்படையிலேயே வரவிருக்கும் தேர்தல்களை நடத்த வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

அதுபோல வாக்குச் சாவடிகள் மறுவரைவு செய்யப்படுவதில் கடுமையான சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. பல கிராமங்கள் மற்றும் குடியிருப்புகள் வெவ்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதால், வாக்காளர்கள் தங்களின் வாக்குகளைப் பதிவு செய்ய பல கிலோ மீட்டர் தூரம் பயணிக்க வேண்டிய அவல நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

#### வாக்குச்சாவடி மறுவரைவு சீரமைப்புப் பணி!

முழுமையான வாக்காளர் பட்டியல் சீரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டு, அனைத்து வாக்காளர்களின் பெயர்களும் விடுபடாமல் சேர்க்கப்பட்ட பின்னரே, அனைத்துக் கட்சிகளின் ஆலோசனையைப் பெற்று ஒருமித்த கருத்து அடிப்படையில் வாக்குச் சாவடி மறுவரைவு சீரமைப்புப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

**அனைத்து மாநிலங்களிலும் தேர்தலுக்கு முன்பாக அவசரகதியில் நடத்தப்பட்டு, திட்டமிட்டு வாக்காளர்களை நீக்க வழிசெய்த S.I.R. முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டும். S.I.R.க்கு முந்தைய வாக்காளர் பட்டியலைக் கொண்டே இனி வரும் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். வாக்காளர் பட்டியல் திருத்தம் என்பது மக்களின் வாக்குரிமையை உறுதிசெய்வதற்கான நடைமுறையாக இருக்க வேண்டுமே தவிர, வாக்குரிமையைப் பறிக்கும் சதி ஆயுதமாக மாற்றப்படக் கூடாது. போதுமான கால அவகாசமும், வாய்ப்புகளும் தரப்பட்டே இனி அப்படிப்பட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.**

#### பழைய வாக்குச்சீட்டு முறையிலேயே தேர்தல்கள்!

நாடு முழுவதும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் மீதான நம்பகத்தன்மையும் கேள்விக்குறியாகி உள்ளது. EVMகளில் பதிவான வாக்குகளுக்கும் VVPAT ஒப்புகைச் சீட்டு எண்ணிக்கைக்கும் வேறுபாடுகள் இருப்பது தொடர்ந்து பல இடங்களில் கண்டு பிடிக்கப்படுவது இந்த ஐயத்தை மேலும் வலுப்படுத்துகிறது. இதன் காரணமாகத்தான், VVPAT ஸ்லிப்புகள் முழுமையாக எண்ணப்பட வேண்டுமெனத் திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தன. இந்நிலையில், மக்களுக்குத் தேர்தல்களின் மீதான நம்பிக்கையை மீட்டெடுக்கவும், தேர்தல் முடிவுகள் நியாயமாக அமைந்திடவும் மின்னணு வாக்குப்பதிவு

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்